# நந்தவனப் பூக்கள்



சொல்லருவி

**மு.முத்து சீனிவாசன்**

# நந்தவனப் பூக்கள்

சொல்லருவி.

**மு.முத்துசீனிவாசன்**

தலைவர்,
புதுக்கோட்டை இலக்கியப் பேரவை

**ஸ்ரீதேவி பதிப்பகம்**
மனை எண். 50, கதவு எண். 1457,
ஸ்ரீ வெங்கடேசா நகர், சமத்துவபுரம் சாலை,
புதுக்கோட்டை - 622 004.
போன் : 04322 - 271100
செல் : 94430 - 41100

நூல் : நந்தவனப் பூக்கள்

ஆசிரியர் : சொல்லருவி. மு.முத்துசீனிவாசன்
தலைவர்,
புதுக்கோட்டை இலக்கியப் பேரவை

பதிப்பு : முதல் பதிப்பு டிசம்பர் - 2012

வெளியீடு : ஸ்ரீதேவி பதிப்பகம்
மனை எண். 50,
கதவு எண். 1457,
வெங்கடேசா நகர்,
சமத்துவபுரம் சாலை,
புதுக்கோட்டை - 622 005.
போன் : 04322 - 271100

உரிமை : ஆசிரியருக்கே

புத்தக அளவு : டெம்மி 1 X 8 அளவு

பக்கங்கள் :

தாளின் தன்மை : 60 ஜிஎஸ்எம். மேப்லித்தோ

எழுத்து அமைப்பு : 13 பாயிண்ட்

விலை : ரூ. 150/-

அச்சகம் : அண்ணாமலை கம்ப்யூட்டர் பிரஸ்
3075, கீழ ராஜ வீதி,
புதுக்கோட்டை - 622 001.
போன் : 04322 - 231211

## கணினிக் கலைவாணி, பல்கலைச் செல்வி

## காம்கேர். கே.புவனேஸ்வரி

தலைமை நிர்வாக அலுவலர் (C.EO) காம்கேர் சாப்ட்வேர் பிரைவேட் லிமிடெட்



"பெண்கள் இந்த நாட்டின் கண்கள்" என்பார்கள். நாட்டின்உயர் பதவிகள், நிறுவனங்களில் உயர் பதவிகள், அறிவியல், கணினித் துறைப்பதவிகள், எனப்பெண்கள் எங்கும் நீக்கமற நிறைந்துள்ளனர். பெண்களால் முடியாதது எதுவுமில்லை என்று சொல்லுமளவுக்கு ஆற்றல் மிக்கவர்களாக, சாதனை படைப்பவர்களாகப் பெண்கள் இருக்கின்றனர்.

அந்த வகையில் ஒரு சாதனைப் பெண்மணியாக விளங்குவர்தான் காம்கேர் கே.புவனேஸ்வரி. இவர் பன்னிரண்டு வயதிலிருந்தே எழுதத் தெடங்கியவர். தமிழையும், கணினி மற்றும் மென்பொருளையும் இணைத்த முதல் பெண்மணி என்ற பெருமைக்கு உரியவர். கம்ப்யூட்டர் துறை பெரிதும் வளராத 1992 களிலேயே அம்முயற்சியைத் தொடங்கியவர்.

முதன் முதலில் தமிழில் கம்ப்யூட்டர் புத்தகங்களை எழுதத் தொடங்கியவர். முதன் முதலில் தமிழில் கம்ப்யூட்டர் கல்வியை அறிமுகப் படுத்தியவர். முதன் முதலில் அனிமேஷன் சிடிக்களை மிகக் குறைந்த விலைக்கு விற்பனை செய்து அறிமுகப்படுத்தியவர். இவர் எழுதிய பல புத்தகங்கள் பல பல்கலைக கழகங்களைச் சார்ந்த கல்லூரிகளில் பாடத்திட்டமாக வைக்கப்பட்டுள்ளன. இப்படி முதன் முதலாக எனப் பல சாதனைகளின் சிகரங்களைத் தொட்டவர் காம்கேர் கே.புவனேஸ்வரி.

இவரது இயற்பெயர் கே.புவனேஸ்வரி. காம்கோர் சாப்ட்வேர் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தை நடத்தி வருவதால் காம்கோர் கே.புவனேஸ்வரி என்று அழைக்கப் பெறுகிறார். இவர் கும்பகோணத்தில் 9.12.1970 அன்று பிறந்தார்.

இவரது தந்தை திரு. வி.கிருஷ்ணமூர்த்தி. மயிலாடுதுறை இவரது சொந்த ஊர். பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் நிறுவனத்தில் 40 ஆண்டுகள் பணியாற்றி துணைக் கோட்டப் பொறியாளராக ஓய்வு பெற்றவர். இவரது மனைவி திருமதி. கே.பத்மாவதி. செஞ்சி தாலுக்கா, ஆலம் பூண்டியைச் சேர்ந்தவர். தொலைபேசித் துறையில் 40 ஆண்டுகாலம் பணியாற்றி முதுநிலை டெலிபோன் சூப்பர்வைசராகப் பணி ஓய்வு பெற்றவர்.



கே.புவனேஸ்வரியின் பெற்றோர்கள், குழந்தைகளுக்கு அறிவுரைகள் என்று ஏதும் சொல்லாமல், தாங்களே நெறிமுறைகளோடு வாழ்ந்து காட்டி, குழந்தைகளை அந்த வழியைப் பின்பற்ற வைத்தார்கள். பாசத்தையும், அன்பையும் பொழிந்தார்கள்.

தாய் தந்தையின் அரசுப் பணி இடமாற்றம், பல வகையான மனிதர்கள், பல ஊர்கள், பல பழக்கவழக்கங்கள் என பலவற்றை புவனேஸ்வரிக்குப் புரியவைத்தது. இவரது பெற்றோர்கள் தங்களுக்கென்று தனியாக நட்புவட்டத்தை வைத்துக்கொள்ளாமல், குடும்பமே கோயில் என்று வாழ்ந்தார்கள். எனவே, பாசமும், நேசமும் தவழ்ந்து விளையாடி, சுதந்திரப் பறவைகளாய் அவர்களின் குழந்தைகள் இருந்தனர். தாய், தந்தையைத் தெய்வங்களாய் தரிசித்தனர்.



கே.புவனேஸ்வரி ஒன்று முதல் பத்தாம் வகுப்புவரை திருவாரூர், சீர்காழி, மயிலாடுதுறை எனப்பல ஊர்களில் பல பள்ளிகளில் படித்தார். பதினொன்று மற்றும் பன்னிரண்டாம் வகுப்பை மயிலாடுதுறை செயின்ட் பால்ஸ் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் முடித்தார். திருச்சி ஸ்ரீமதி இந்திராகாந்தி கல்லூரியில் பி.எஸ்.ஸி., (கணினி அறிவியல்) பட்டம் பெற்றார். பின்னர் 1990-

1992 ஆம் கல்வி ஆண்டில், மயிலாடுதுறை மன்னம்பந்தல் ஏ.வி.சி கல்லூரியில் எம்.எஸ்.ஸி., (கணினி அறிவியல்) முதுகலைப் பட்டம் பெற்றார்.

முதுகலைப் பட்டம் பெற்றவுடன், சொந்தமாகத் தொழில் தொடங்கவேண்டும் என முனைந்தார். அதற்கு இவரது கற்பனை வளமும், திறனும், படைப்பாற்றலுமே காரணம், குறைவான பேச்சு, நிறையப் படிப்பு, அழகான கற்பனை, ஆழமான சிந்தனை, அம்மா, அப்பாவின் ஊக்கம் தரும் ஆதரவு, தம்பி, தங்கையின் ஆரோக்கியமான போட்டி என இவைகளெல்லாம் புவனேஸ்வரியின் படைப்பாற்றலைக் கொழுந்து விட்டு எரியச் செய்தன.

இந்த அடிப்படை உந்துதலில், 1992 ஆம் ஆண்டு காம்கேர் சாப்ட்வேர் என்ற சாப்ட்வேர் தயாரிக்கும் நிறுவனத்தைத் தொடங்கினார், அன்றிலிருந்து இன்றுவரை காம்கேர் சாப்ட்வேர் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தின் முதன்மை நிர்வாக அலுவலராகச் செயல்பட்டு வருகிறார். தனது நிறுவனத்தின் மூலமும், தனது கிளையண்ட், நிறுவனங்களின் முலமும், ஆயிரக் கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். இந்நிறுவனத்தின் வாயிலாக சாஃப்ட்வேர்கள், மற்றும் மல்டிமீடியா அனிமேஷன் சிடிக்கள் தயாரித்தல், வெப்சைட்டுகளை வடிவமைத்தல், கம்ப்யூட்டர் புத்தகங்கள் மற்றும் இ-புத்தகங்களை உருவாக்குதல் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.

தொலைக்காட்சி வாயிலாக கம்ப்யூட்டர் பற்றிய நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறார். சமுதாய விழிப்புணர்வுக்காகவும், கார்பரேட் நிறுவனங்களுக்காகவும், தனிமனித வாழ்க்கை வரலாறு சம்பந்தமாகவும் ஆவணப்படங்களை தயாரித்து இயக்கி வருகிறார்.

கம்ப்யூட்டர் துறை சார்ந்த சாஃப்ட்வேர், ஹார்டுவேர், இன்டர்நெட் சம்பந்தப்பட்ட நூல்களை தமிழில் 50-க்கும் மேல் எழுதியுள்ளார். இவர் எழுதிய புத்தகங்கள், பல பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த கல்லூரிகளில் பாடத்திட்டமாக உள்ளன.

பல முன்னணி பத்திரிகைகளில் கம்ப்யூட்டர் பற்றிய தொடர் எழுதிவருகிறார். கம்ப்யூட்டர் தவிர, குழந்தைகள், பக்தி,

இலக்கியம், ஆன்மிகம், மனிதவள மேம்பாடு சம்பந்தப்பட்ட விஷயங்களைக் எழுதுவதிலும் ஆர்வம் காட்டி வருகிறார்.

2007-ம் ஆண்டு இவரது தாய் பத்மாவதி, தந்தை கிருஷ்ணமூர்த்தி ஆகிய இருவரின் பெயரில் ஸ்ரீ பத்மகிருஷண என்ற அறக்கட்டளையைத் தொடங்கினார். இதன் மூலம் குழந்தைகள், இளைஞர்கள், பெண்கள், மாற்றுத் திறனாளிகள் போன்றோருக்குச் சிறப்பு நிகழ்ச்சிகளையும, வாழ்வியல் பயிலரங்குகளையும் நடத்தி வருகிறார். மேலும் வருடா வருடம் திறமையானவர்களுக்கு ஸ்ரீ பத்மகிருஷ் விதுகளையும் வழங்கிவருகிறார்.

சாப்ட்வேர் துறையில் சாதனைகள் படைத்துவந்தாலும், இவரது கல்வித் தாகம் மட்டும் குறையவேயில்லை. எனவே, திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து, அஞ்சல் வழிக்கல்வி மூலம் 2011-2012 ஆம் கல்வி ஆண்டில் எம்.பி.ஏ., பட்டம் பெற்றார்.

பன்னிரண்டு வயதில் கதை எழுதத் தொடங்கிய இவர், தனது 20 வயதுக்குள் கோகுலம், சாவி, பாக்யா, கலைமகள், சுமங்கலி, வாரமலர், ராணி, நாரதர், கல்கி, விஜயபாரதம் போன்ற பல இதழ்களில் அறுபதுக்கும் மேற்பட்ட கதை, கட்டுரை, கவிதை எழுதியுள்ளார். இயல்பிலேயே எழுதும் ஆர்வமும் ஆற்றலும் கொண்ட இவர் இதழியல் துறையையும் விட்டு வைக்கவில்லை எனலாம்.

இவர் 12 வயதில் எழுதிய 'செய்யும் தொழிலே தெய்வம்' என்ற முதல் சிறுவர் கதை கோகுலம் இதழில் வெளிவந்தது. இவர் தனது 18 வயதில் 'வேரை விரும்பாத விழுதுகள்' என்ற பெயரில் பெரியோர்களுக்கான முதல் சிறுகதை எழுதினார். அது கலைமகள் இதழில் வெளிவந்தது.

இவர் 20 வயதில் எழுதிய 'நியதிகள் மாறலாம்' என்ற கதை சாவிவார இதழிலும், 'அன்றாட வாழ்வில் தேச உணர்வு' என்ற கட்டுரை விஜயபாரதம் இதழிலும், 'வீடுண்டு விளக்கில்லை' என்ற கவிதை வாசல் இதழிலும் வெளிவந்தன. இக்கதைகள், கட்டுரை, கவிதை அனைத்தும் விருதுகளைப் பெற்றன.

தொடர்ந்து எழுதுவதில் ஆர்வத்தைக் காட்டிக் கொண்டே வந்தார். 1992 களில் தொடங்கப்பட்ட தமிழ் கம்ப்யூட்டர் என்ற பத்திரிகையில் கம்ப்யூட்டர் தொடர்கள் 5 வருடங்கள் தொடர்ந்து எழுதி வந்தார்.

மங்கையர் மலருக்கு 'உலகம் உன் கையில்' என்ற தலைப்பில் 1 வருட காலம் தொடர்ந்து பெண்களுக்கு வழி காட்டுகின்ற பயன் கொடுக்கின்ற கம்ப்யூட்டர் படிப்புகள் / தொழில்கள் சம்பந்தமாக கட்டுரைகள் எழுதி வந்தார். பிறகு அதுவே 'இன்ஃபர்மேஷன் டெக்னாலஜி - ஒரு அறிமுகம்' என்ற தலைப்பில் இவரது முதல் புத்தகமானது. அப்புத்தகத்தை அநுராகம் பதிப்பகம் வெளியிட்டது

குமுதம் சிநேகிதியில் பெண்களுக்கான கம்ப்யூட்டர் தொடர் ஒன்றை 1 வருடகாலம் எழுதி வந்தார்.

தொடர்ந்து சென்னை தவிர்த்து பிற ஊர்களில் வெளிவருகின்ற தினமலர் நாளிதழின் கம்ப்யூட்டர் மலர் பகுதியின் முகப்புக் கவர் ஸ்டோரியை தொடர்ந்து 4 வருட காலம் எழுதி வந்தார்.

இது தவிர பயணக் கட்டுரை, ஆன்மீகம், பெண்களுக்குத் தொழில் வழிகாட்டி, குழந்தைகளுக்குப் பொது அறிவு கதைகள், போன்று அனைத்து பொருள்களிலும் கதைகள், கட்டுரைகள் போன்றவற்றை எழுதியுள்ளார். மேலும் ஒவ்வொரு வருட தீபாவளி மலருக்கும் அமுதசுரபி, விஜயபாரதம், திரிசக்தி மற்றும் அம்மன் தரிசனம் போன்ற முன்னணி பத்திரிகைகளில் எழுதி வருகிறார்.

இவரது எழுத்துப் பயணம் என்பது கடல்போல் விரிந்து கொண்டே போகிறது. இதுவரை 2000 கட்டுரைகளுக்கு மேல் எழுதியுள்ளார். 50 புத்தகங்களுக்குமேல் வெளிவந்துள்ளன. 60 கதைகளுக்கு மேல் பிரசுரமாகியுள்ளன. இத்துடன் பல கவிதைகளையும் எழுதியுள்ளார்.

கே.புவனேஸ்வரி அவர்களைப் பற்றிய செய்திகள், பேட்டிகள், அவரது நூல்கள் பற்றிய விமர்சனங்கள் THE HINDU, தினமலர், தினத்தந்தி, தினகரன், தினமணி, ஆனந்தவிகடன், சுட்டிவிகடன், அவள் விகடன், அமுதசுரபி, கலைமகள், லேடீஸ் ஸ்பெஷல், குமுதம் சிநேகிதி, தமிழ் கம்ப்யூட்டர், வசந்தம் ஆகிய இதழ்களில் வெளிவந்துள்ன.

இவர் தொலைக்காட்சிகளில் அளித்த பயிற்சிகளும், பேட்டிகளும் பலருக்கும் பல வகையில் பயனளித்தன. உலகமெங்கும் பலரால் வரவேற்கப்பட்டன. ஜெயா டி.வியில் பெண்களுக்காக கம்ப்யூட்டர் பயிற்சி மற்றும் தொழில் ஆலோசனைகள் வழங்கும் நிகழ்ச்சியைத் தொடர்ந்து ஐந்து வருடங்களுக்கு மேல் நடத்தினார். இது ஒரு அசுர சாதனையாகும்.

அயல்நாடுகளில் ஒளிபரப்பாகும் TTN - TAMIL TELEVISION NETWORK-ttn - தமிழ் ஒளி தொலைக்காட்சியில், வெளிநாடுகளில் வாழ்கிற தமிழர்களுக்காக கம்ப்யூட்டர்






கல்வி சம்பந்தப்பட்ட நிகழ்ச்சியை 150 எபிசோடுகளுக்கும் மேல் நடத்திய பெருமை புவனேஸ்வரிக்கு உண்டு.

இவர் அண்ணாபல்கலைக் கழகத்தைச் சார்ந்த அண்ணா F.M மற்றும் அகில இந்திய வானொலியில் நிகழ்ச்சிகள் நடத்தி மெகா சாதனை புரிந்துள்ளார். பாண்டிச்சேரி எஃப் எம்இல் தினம் ஒரு கதை 730 நாள் நிகழ்ச்சிகள், தினம் ஒரு திருக்குறள் 730 நாள் நிகழ்ச்சிகள், தினம் ஒரு பழம் 30 நாள் நிகழ்ச்சிகள், தினம் ஒரு காய் 30 நாள் நிகழ்ச்சிகள், தினம் ஒரு மரம் 30 நாள் நிகழ்ச்சிகள், தினம் ஒரு பூ 30 நாள் நிகழ்ச்சிகள் என வானொலி ரசிகர்களுக்குச் செவிக்குணவை அளிக்கும் வள்ளலாய் இருந்துள்ளார்.

லேடீஸ் ஸ்பெஷல் மாத இதழ் கே.புவனேஸ்வரியின் படத்தை அட்டைப் படமாகப் போட்டு, அவரது பேட்டியை வெளியிட்டுக் கௌரவப்படுத்தியது, தி இந்து நாளிதழ் இவர் பற்றிய செய்தி வெளியிட்டு, இவரது திறமைக்குச் சான்றளித்தது. கலைமகள் மற்றும் அமுத சுரபியிலும் இவரது பேட்டிகள் வெளிவந்துள்ளன. இது தவிர, தினமலர், தினத்தந்தி போன்ற பத்திரிகைகளும், இவரது திறமையை வெளிப்படுத்தும் விதமாகப் இவரது பேட்டிகளைப் பிரசுரித்து உள்ளன.

எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல 2004 ஆம் ஆண்டு, மே 2ந்தேதி கல்கி இதழ் முகப்பு அட்டையில் பல பிரபலங்கள் வரிசையில் இவரது படத்தையும் வெளியிட்டுப் பெருமைப்படுத்தியது.

காம்கேர் நிறுவனத்தின் சார்பில், ஏராளமான அனிமேஷன் சிடிக்களை வெளியிட்டுள்ளார். சாலை பாதுகாப்பு, உயிர் பாதுகாப்பு, தினம் ஒரு பழம், பேரன் பேத்திபாடல்கள், கந்தர் சஷ்டி கவசம்,



# The Oracle in Tamil

**OFFBEAT** Computer books in Tamil? K. Bhuvaneswari has over 30 works to her credit



KEY TO SUCCESS K.Bhuvaneswari PHOTO:



இராமாயணக் கதைகள், தாத்தா பாட்டி நீதிக்கதைகள், தமிழ்கற்க, முல்லாவின் நகைச்சுவைக் கதைகள், ஈசாப் நீதிக்கதைகள், தெனாலிராமன் பல்சுவைக் கதைகள், மழலை முத்துக்கள், மழலை மெட்டுக்கள், மழலைச் சத்தம், ANCIENT INDIA, R.G. VEDIC STUDIES, இராமாயணக் கதைகள், THIRUKKURAL திருவாசகம், விஷுவல் பேஸிக் நெட் போன்று ஏராளமான சிடிக்களை வெளியிட்டுச் சாதனை புரிந்துள்ளார். அவரது பயணம் தொடர்ந்து கொண்டுள்ளது.

காம்கேர் கே.புவனேஸ்வரி தனது நிறுவனத்தின் சார்பில் உள்ள வலைத்தளத்தில், உலக மக்களுக்குப் பல செய்திகளை அளித்து வருகிறார். இவர் ஆவணக் குறும்படங்களையும் தயாரித்து



உள்ளார். அன்புள்ள அப்பா அம்மாவுக்கு, வெற்றி பெற்ற தொழிலதிபர்களின் வெற்றிக் கதைகள், COMPARISON BETWEEN HIGHER STUDIES IN USA & INDIA ஆகிய குறும்படங்கள் குறிப்பிடத் தக்கவை.

இவர் ஒரு சமூக ஆர்வலர். கிராமப்புறங்களிலிருந்து படித்துப் பட்டம் பெற்று சென்னை வருகின்ற மாணவ மாணவிகளுக்கு, வேலை வாய்ப்புக்கு உதவுகின்ற 'கன்சல்டன்சி' மற்றும் கருத்தரங்குகளையும் நடத்திவருகிறார்.

கிராமப்புறங்களிலுள்ள கல்லூரிகளுக்குச் சென்று, அங்குள்ள மாணவர்களுக்குத் தன்னம்பிக்கை கொடுக்கும் விதத்தில் கேரியர் கைடன்ஸ் ஒர்க்ஷாப்புகளையும் (Career Guidance Workshop) நடத்தி வருகிறார்.

தனது நிறுவனத்தின் கம்பெனி ப்ராஜெக்ட்டுகள் மூலம் மாணவர்களுக்கு சாஃப்ட்வேர் பயிற்சி கொடுத்து வேலை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்து வருகிறார். இதுவரை ஆயிரக்கணக்கான மாணவ, மாணவிகள் இவரிடம் பயிற்சிப் பெற்று சாஃப்ட்வேர் துறையில் பிரகாசித்து வருகிறார்கள்.

மயிலாடுதுறை, பாரதிதாசன் பல்கலைக்கழகக் ஏ.வி.சி.கல்லூரியில் "Member of Board of Studies in Computer Science" ஆக இருந்தார். 2007 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம்

ஆண்டுவரை, கல்லூரியில் கம்ப்யூட்டர் சயின்ஸ் பாடத்திட்டங்களில் வருடாவருடம் மாற்றங்கள் செய்தல், புதுப்பித்தல் புதிய பாடத்திட்டங்களைப் புகுத்துதல் போன்ற பணிகளைக் கல்லூரி சம்பந்தப்பட்டவர்களுடன் இணைந்து செயல்படுத்தி வந்தார்.

மைசூர் பல்கலைக் கழகத்தின் மல்டிமீடியா ஆராய்ச்சிக் கூட "E - Learning Co-Ordinator in Electronic Media Science" ஆக இருந்து, அப்பிரிவில் பயிலுகின்ற எலக்ட்ரானிக் மீடியா மாணவ மாணவிகளுக்குக் கல்வி சம்பந்தமான ஆவணப் படங்களைத் தயாரிக்கின்ற பணியில் 2006 ஆண்டுமுதல் 2010 ஆம் ஆண்டுவரை ஈடுபட்டார்.

சிங்கப்பூர் "சதர்ண் சென்டர்ஃபார் டெக்னாலஜி" நிறுவனத்தில் கல்வி ஆலோசகராக இருந்து, மல்டி மீடியா சம்பந்தமான ஆலோசனைகளை வழங்குதல், புத்தகங்களைத் தயாரித்துத் தருதல் போன்ற பணியில் 2006 ஆம் ஆண்டு ஈடுபட்டார்.

சென்னை மாநிலக் கல்லூரியில் பணியாற்றி வருகின்ற பார்வையற்ற பேராசிரியர் டாக்டர். திரு. ஜெயச்சந்திரன் அவர்களுடன் இணைந்து, பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு ஊக்கப்படுத்துகின்ற நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள் போன்றவற்றை முன்னின்று செய்து கொண்டு இருக்கிறார். இதனால் தக்கர் பாபா வித்யாலயா பார்வையற்ற கல்லூரி மாணவர்களுக்குத் தேவையான உதவிகள் கிடைக்கின்றன.

கே.புவனேஸ்வரி பெற்ற விருதுகளும், வெகுமதிகளும், பட்டங்களும் அவரது திறமைக்குக் கிடைத்த நல்ல அங்கீகாரமாக அமைந்து உள்ளன.

சரஸ்வதி பீடத்தின் சர்வகலாவாணி (By Compcare Employees, Chennai)

சுதேசி பெண் தொழிலதிபர் விருது ( Swadeshi Enterpreneur Award) - By Swadeshi Jagaran Manch, Chennai.

சிறந்த சாஃப்ட்வேர் தயாரிப்பாளர் விருது (Software Specialist Award) - By Yuvasakthi, Chennai

சிறந்த எழுத்தாளர் விருது (Best Wrirer Award) - By Neiveli Book Fare, Neiveli

சிறந்த முன்னாள் கல்லூரி மாணவி(Outstanding Old Student Award) - By Shrimathi Indira Gandhi College, Trichirappalli

பெண் சாதனையாளர் விருது (Women achiever award) - By Canara Bank & Inner Wheel Club

கணினி மேதை (Computer Genius) - By Tamil Association, Chennai

சிறந்த கல்வியாளர் (Best Educationalist) - By Educational Society of Bureau, Chennai.

சிறந்த மல்டிமீடியா சிடி-டிவிடி தயாரிப்பாளர் (Best Multimedia Product Prodecer) - By Media Corporation, Chennai.

தன்னம்பிக்கைத் தாரகை - முத்தமிழ் பேரரசி டாக்டர் சரஸ்வதி இராமநாதன் - இவரது ஸ்ரீ பத்மகிருஷ் அறக்கட்டளை தொடக்க விழாவின் போது அளித்த பட்டம்.



August 3, 2012

அன்புள்ள கே. புவனேஸ்வரி,

நீங்கள் அனுப்பிய மின்னஞ்சல் கிடைக்கப்பெற்றேன். வாழ்த்துக்கள். ஆனந்த விகடனுக்காக, நீங்கள் பேஸ்புக் பற்றி எழுதுவது பற்றி அறிந்தேன். மிக்க மகிழ்ச்சி.

பேஸ்புக் சமூக வலைத்தின் மூலம் ஒரு விஷயத்தை, தகவலை பல்லாயிரக்கணக்கானோரிடம் கொண்டு சேர்க்க ஏதுவாக இருப்பதால் அது நல்ல விஷயங்களை உடனடியாக அதை உபயோகப்படுத்துபவர்களிடம் சென்று சேர்த்து விடுகிறது. இது ஒரு நல்ல விஷயம். இது பல உள்ளங்களை இணைக்கிறது, கருத்தொற்றுமை ஏற்படுத்த ஒரு சாதனமாக விளங்குகிறது. தனது கருத்துக்களை வெளிப்படையாக தெரிவிக்க ஒரு வடிகாலாக விளங்குகிறது. அது மட்டுமல்ல, இது ஒரு அறிவுசார்ந்த, அறிவாற்றலை வெளிப்படுத்தும் ஒரு சாதனம். இது மற்றவர்களின் சாதனைகளை பகிர்ந்து கொள்ளும் தளமாக மாறவேண்டும். அதன் மூலம் இளைய தலை முறை நம்பிக்கையை பெறவேண்டும், என்னால் முடியும் என்ற எண்ணத்தை வளர்க்க வேண்டும். எனவே, பேஸ்புக்கை, நல்ல விஷயங்களை பகிர்ந்து கொள்ளும் தளமாக உபயோகப்படுத்தப்பட வேண்டும்.

உங்கள் முயற்சிக்கு என் வாழ்த்துக்கள்.

அ. ப. ஜெ. அப்துல் கலாம்.

apj@abdulkalam.com
www.abdulkalam.com
www.facebook.com/officialkalam
www.facebook.com/kalambillionbeats

கே.புவனேஸ்வரியின் செயல்களைப் பாராட்டிப் பலர் கடிதங்கள் எழுதியுள்ளனர். அவற்றுள், இவர் விகடன் பிரசுரத்திற்காக எழுதிய ஃபேஸ்புக் A To Z புத்தகத்திற்கு முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர் மாண்பமை அ.ப.ஜெ அப்துல் கலாம் அவர்கள் எழுதிய கடிதம் குறிப்பிடத்தக்கது.

இவ்வளவு ஆற்றலையும், சிறப்புகளையும் பெற்ற காம்கேர் கே.புவனேஸ்வரி திருமணம் செய்து கொள்ளாமல், கல்வி, சமூகப்பணியாற்றுவதே தனது பணி எனக்கடுமையாக உழைக்கிறார். இவர் தூங்குகிற நேரம் குறைவு. பிறர் தூங்கியபிறகு அமைதியாகப் பணி செய்வது இவருக்கும் பிடித்தமானது.

செல்வி. கே.புவனேஸ்வரின் தங்கை திருமதி. கே.வித்யா அமெரிக்காவில், வாஷிங்க்டன் பல்கலைக் கழகத்தில் 'சீனியர் சாப்ட்வேர் கன்சல்டன்ட்' ஆகப் பணியாற்றுகிறார். அவருடைய கணவர் திரு. ஜி.நந்தகுமார் அமெரிக்காவில் சாப்ட்வேர் வல்லுனராக உள்ளார்.

செல்வி கே.புவனேஸ்வரியின் தம்பி திரு. கே.ஸ்வாமிநாதனும் அவருடைய மனைவி திருமதி. மதுவும் அமெரிக்காவில் சாப்ட்வேர் துறை வல்லுனர்களாக உள்ளனர்.

செல்வி. கே.புவனேஸ்வரியின் லட்சியம் மிகவும் பெரியது. அதைச் சாதிக்கும் ஆற்றலும், திறமையும் அவரிடம் உள்ளது. அவர் கூறுகிறார்.

"நான் செய்து வரும் தொழிலையும் (காம்கேர் சாஃப்ட்வேர் நிறுவனம்), சேவையையும் (ஸ்ரீ பத்மகிருஷ்ண அறக்கட்டளைப் பணிகள்) மென்மேலும் சிறப்பாக செய்து எதிர்காலத்தில் பல்லாயிரக்கணக்கானோருக்கு வேலைவாய்ப்புகளை வழங்க வேண்டும்."



"புத்தகங்கள், மேடைப் பேச்சு, மல்டி மீடியா அனிமேஷன் சி.டி தயாரிப்புகள், குறும் படங்கள் போன்ற என் நிறுவனத்தின் அனைத்துப் பிரிவுகளுக்கும் ஆதாரமாக இருக்கின்ற என் எழுத்து மூலம் பல்லாயிரக்கணக்கானோருக்கு கல்வி அறிவையும், வாழ்க்கை வழிக்காட்டுதலையும், விழிப்புணர்வையும் வழங்க வேண்டும் என்பதே என் இலட்சியம்."



செல்வி கம்கேர் கே.புனேஸ்வரியை பாராட்டி வாழ்த்தி. குழந்தை இலக்கியச் செல்வர் திரு. பி.வெங்கட்ராமன் எழுதிய கவிதை புவனேஸ்வரியின் இதயத்தை நெகிழவைத்த கவிதையாகும்.

## காம்கேர் நிறுவன அதிபர்
# செல்வி புவனேஸ்வரி
### அவர்கட்கு நல்வாழ்த்து

உலகளாவிய
கணிப்பொறி
இயக்கத்தில்
இங்கே நாம் காணும்
இந்நகரில்
தனிப்பெரும் தலைவி!

கற்க கசடறக்
கணினி கல்வி
புகட்டும்
கனிவுமிகு செல்வி!

ஜனவரிக்குப் பின்
பிப்ரவரி!
சலியாத உழைப்பின்
பின்பலம்
பின்புலம்
**புவனேஸ்வரி!**

மழலையருக்கான
உங்கள் குறுந்தகடு
முத்துக்கள்!
அனைத்தும்
முத்தான
சொத்துக்கள்!

ஐந்து மணி நேரமே
உறங்கி
இரவைப் பகலாக்கி
இடையறா உங்கள்
உழைப்பு!
எங்களுக்கெல்லாம்
மலைப்பு!



உங்கள் நிகரற்ற
நிறுவன வெற்றியின்
இரகசியம் இதுதான்!

கந்தர் சஷ்டி
கவசம் முதல்
இண்டர்நெட்
இணையம் இவை குறித்த
இணையற்ற திறன்
உங்கள் வசம்!

"டோண்ட்கேர்" என
எவரையும்
ஒதுக்காது -
கனிவுள்ளம்
பணிவன்புடன்
உங்கள் செயல்பாட்டால்
உயர்ந்து நிற்கிறது
உங்கள்
"காம்கேர்" நிறுவனம்!

அர்ப்பணிப்புடன்
தாங்கள் ஆற்றிவரும்
பணி!
அனைவரும்
போற்றும் நற்பணி!

வளர்க!
உங்கள் தொண்டு!!

"வாழ்க்கையே சவால்கள் நிறைந்தது தான். எத்தனையோ மனிதர்கள் பல்வேறு காரணங்களினால் வாழ்க்கையில் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பதை தினம் தினம் பார்க்கிறேன். அவற்றோடு ஒப்பிடும் போது என் நிறுவனத்துக்காக நான் உழைப்பது ஒன்றும் கஷ்டம் இல்லை. ஆனால் என்ன? சவால்களை எதிர் கொள்ள வேண்டியிருக்கிறதே?"

"வெற்றி... தோல்வி என்று நான் எதையும் பிரிப்பதில்லை. உண்மையாக உழைக்கிறேன். சரியான இலக்கை நோக்கிப் பயணிக்கிறேன். மிக சரியாகத் திட்டமிட்டுகிறேன். என் அளவு தெரிந்து செலவழிக்கின்றேன்... சில சமயம் மிகப் பெரிய வெற்றியும், வரவேற்பும் கிடைக்கிறது. ஒரு சில சமயம் குறைவாகக் கிடைக்கின்றது. தோல்வியை நான் குறைந்த அளவு வெற்றி என்று தான் சொல்லுவேன்".

"நான் என் பாதையில் சென்று கொண்டே இருக்கிறேன். போட்டி போட நான் என்றுமே விரும்பியதில்லை. என்னால் முடிந்ததை மட்டும் அல்லாமல் என்னால் முடியாததையும் என் சக்திக்கும் மீறிச் செய்து உழைக்கிறேன். அதனால் கிடைக்கும் பலனையும் அப்படியே எதிர்கொள்கிறேன். என்னுடஎ ஓடுபவர்களைப் பற்றி நான் கவலைப்படுவதில்லை. நான் எந்த அளவுக்கு ஓடுகிறேன் என்பதில் மட்டுமே கவனம் செலுத்துகிறேன். இது தான் என் வெற்றியின் இரகசியம்".

"என் நிறுவனத்தில் பணி புரிபவர்களின் குடும்பத்தை என் குடும்பமாகப் பாவிக்கிறேன். அவர்கள் ஒவ்வொருவரையும் தாயன்போடும், அதே சமயம் தேவைப்படும் போது தந்தையின் கண்டிப்போடும் நடத்திச் செல்லுகிறேன். நாம் வளர்க்கும் நம் குழந்தைகள் எல்லோருமே நம்மிடம் ஒரே மாதிரி பாசத்தோடு இருப்பதில்லையே. நிறுவனங்களிலும் அதே நிலை தான். மனிதர்கள் ஒன்று தான். இருக்கும் இடம் தான் வேறு".

"சந்தோஷம், துக்கம் இரண்டையும் ஒன்றாகப் பார்க்கும் தத்துவத்தை என் நிறுவனம் எனக்குக் கற்றுக் கொடுத்துள்ளது. ஏராளமான தன்னம்பிக்கையை ஊட்டியுள்ளது. இன்று வரை அது தொடர்கிறது".

"நான் ஒரு பெண்ணாக பார்க்கப்படுவதை என்றுமே விரும்பியதில்லை. என் திறமையால் மட்டுமே பேசப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறேன்".



"பெண்கள் உடல் அலங்காரங்களில் கவனம் செலுத்துவதைக் குறைத்து, மனதை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தத் தொடங்க வேண்டும். முதலில் பெண்கள், பெண்களை மதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். கற்றுக் கொண்டால் நல்ல மாற்றம் கிடைக்கும்".

"20 வருடங்கள் தவம் போல இருக்கிறது என் தொழில்"

காம்கேர் புவனேஸ்வரி அவர்களின் வார்த்தை முத்துக்களை எண்ணி எண்ணி வியக்கலாம். 42 வயதே நிரம்பிய ஒரு திறனாளியின் வார்த்தைகள் நமக்கு உற்சாகத்தை அளிக்கிறது. ஞானிகளும், சித்தர்களும், யோகிகளும், முனிவர்களும் அருளிச் செய்த அரும் பொருட் கருத்துக்களை தனது லட்சியமாக அள்ளித் தெளிக்கிறார் கேர்.புவனேஸ்வரி. அவர் கூறியுள்ளவை காலத்தால் அழிக்க முடியாத வைர வரிகளாகும்.





இன்னும் சாதிக்கத் துடிக்கும் ஒரு சாதனையாளரின், சரித்திரக் குறிப்புக்களாகும் அவருடைய வார்த்தைகள் சுயமாகத் தொழில் தொடங்கி, கடுமையாக உழைத்து, அதனால் முன்னேறித் தொழில் அதிபராக, ஒரு எழுத்தாளராக உருவாகியுள்ளார். எனவே அவர் ஒரு சுயம்பு எனலாம்.

கம்ப்யூட்டர், மென்பொருள் வல்லுனராக, மல்டிமீடியா சிடிக்கள் தயாரிப்பவராக தொழில் மற்றும் கல்வி சம்பந்தமான தொலைக்காட்சித் தயாரிப்பாளராக, கதாசிரியராக, குறும்படத் தயாரிப்பாளராக, இயக்குநராக, சமூக சேவகராக, சாதனைகள் படைத்த சரித்திர நாயகியாக, விருதுகள் பெற்ற வீராங்கனையாக, எனப் பல முகம் கொண்ட பண்பாளராக விளங்கும் காம்கேர் கே.புவனேஸ்வரி அவர்களின் வெற்றிப் பயணம் தொடரட்டும். அவரது பயணப் பாதையில் பல சரித்திரச் சாதனைகள் இன்னும் நிகழட்டும். அவர் நூறாண்டு வாழட்டும் என்று வாழ்த்துவோம்.